**31. ஓய்வு, பொழுதுபோக்கு மற்றும் கலாசார நடவடிக்கைகள்**
பிள்ளைகள் ஓய்வாக இருக்க, விளையாட, கலாசார மற்றும் கலை நிகழ்ச்சிகளில் பங்குபெற உரிமையுடையவர்களாவர்.

**32. சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல்**
தம் ஆரோக்கியம், கல்வி, வளர்ச்சி என்பவற்றின் மேம்பாட்டுக்கு அச் சுறுத்தலாய் அமையக்கூடிய வேலைகளிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை பிள்ளைகளுக்கு உண்டு. தொழிலில் அமர்த்துதற்குரிய குறைந்த பட்ச வயதை வரையறை செய்தலும் தொழில் நிபந்தனைகளை நெறிப்படுத்துதலும் அரசின் கடப்பாடாகும்.

**33. போதைப் பொருட் துர்ப்பிரயோகம்**
பிள்ளைகள் சட்டவிரோத மருந்துகளைப் பாவிப்பதிலிருந்தும் அவற்றின் உற்பத்தி அல்லது விநியோகத்தில் ஈடுபடுத்தப்படுவதிலிருந்தும் பாதுகாப்புப் பெறும் உரிமையுடையவர்களாவர்.

**34. பாலியல் வாரியான சுரண்டல்**
ஒவ்வொரு பிள்ளையும் விபசாரம் மற்றும் ஆபாசக் காட்சிகள் ஆகியன அடங்கலான பாலியல் சுரண்டல்கள், இம்சைகள் முதலியவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமையுடையதாகும்.

**35. விற்பனை, பரிவர்த்தனை, கடத்தல்**
பிள்ளைகளை விற்றல், பரிவர்த்தனை செய்தல், கடத்துதல் போன்றவற்றைத் தடுப்பதற்கு அரசு சகல விதத்திலும் முயலுதல் வேண்டும்.

பிள்ளைகளை விற்பனை செய்தல், அவர்களை விபசாரத்தில் ஈடுபடுத்துதல், ஆபாச நடவடிக்கைகளுக்கு அவர்களை உபயோகித்தல் என்பவற்றைத் தடை செய்வதற்கு வேண்டிய புதிய நியமங்களை உருவாக்கும் "விருப்பத் தேர்வு நடவடிக்கைக் குறிப்பு" 2002 ஆம் ஆண்டு மே மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சட்டமானது, சம்பந்தப்பட்ட நாடுகளில் குற்றம் இழைப்போர் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவும் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கவும் குற்றச் செயல்கள் நிகழாதிருக்கும் பொருட்டு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இக்குற்றச் செயல்களை இல்லாதொழிக்க பல்வேறு நாடுகள் இணைந்து செயற்படவும் உதவுகிறது.

**36. வேறு வகையான சுரண்டல்கள்**
அரசு, மேலே 32-35 வரையான உறுப்புரைகளில் சொல்லப்படாத மற்றெல்லா வகையான இம்சைகள், சுரண்டல்களிலிருந்தும் பிள்ளைளைப் பாதுகாத்தல் வேண்டும்.

**37. சித்திரவதையும் சுதந்திரத்தைப் பறித்தலும்**
எந்தப் பிள்ளையும் சித்திரவதை, குரூர தண்டனை, ஆயுட் சிறைத் தண்டனை, மரணதண்டனை, சட்டவிரோதமான கைது அல்லது சுதந்திரம் மறுப்பு ஆகியவற்றுக்கு உள்ளாக்கப்படலாகாது. தகுந்த சிகிச்சை, தடுப்புக் காவலிலுள்ள வளர்ந்தோரிடமிருந்து விலக்கி வைக்கப்படல், குடும்பத்தவர்களுடன் தொடர்பு கொள்ளல், சட்ட மற்றும் ஏனைய உதவிகளைப் பெறல் ஆகியவற்றுக்கு உரித்துடையதாகும்.

**38. ஆயுதப்பிணக்குகள்**
போர்க் காலத்தில் பாதுகாப்புப் பெறும் உரிமை பிள்ளைகளுக்கு உண்டு. 15 வயதுக்குக் குறைந்த எந்தப் பிள்ளையும் போராட்டங்களில் நேரடியாக ஈடுபடவோ ஆயுதப் பிணக்குகளில் சேர்க்கப்படவோ கூடாது. அரசாங்கம் ஆயுதப் பிணக்கினால் பாதிக்கப்பட்ட எல்லாப் பிள்ளைகளுக்கும் பராமரிப்பும் பாதுகாப்பும் வழங்குதல் வேண்டும்.

பிள்ளைகளை ஆயுதப் பிணக்குகளில் ஈடுபடுத்துவது தொடர்பான சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்துக்கான "விருப்பத்தேர்வு நடவடிக்கைக் குறிப்பு" 2000 ஆம் ஆண்டு மே மாதம் அறிமுகஞ் செய்யப்பட்டது. இது பிள்ளைகளை ஆயுதப் பிணக்குகளில் ஈடுபடுத்துவதைக் கட்டுப்படுத்துகின்றது. இதன் பிரகாரம் ஆயுத மோதல்களில் ஒருவர் ஈடுபடுவதற்கு முன்பதாக 18 வயதை அடைந்திருத்தல் வேண்டும் (சிறுவர் உரிமைகள் பற்றிய சமவயத்தில் கூறப்பட்டுள்ள 15 வயதுக்குப்பதிலாக)

**39. புனர்வாழ்வுப் பராமரிப்பு**
ஆயுதப் பிணக்குகளில் சித்திரவதை, புறக்கணிப்பு, துர்நடத்தை அல்லது சுரண்டலுக்கு உள்ளான பிள்ளைகள் குணமாகி சமுதாயத்தில் மீண்டும் சேர்ந்து கொள்வதற்கான உதவிகளை உறுதி செய்யும் கடப்பாடு அரசாங்கத்தினுடையதாகும்.

**40. பாலியர் நியாயாதிக்க நிர்வாகம்**
பிள்ளைகள் ஒரு குற்றம் புரிந்ததாகப் பழி சுமத்தப்பட்டால், சட்ட ரீதியாகவும் வேறு வகையாகவும் உதவி பெற அவர்களுக்கு உரிமை உண்டு. சட்ட நடவடிக்கைகள், பராமரிப்பு நிலையங்களில் சேர்த்தல் முதலியன முடியுமான வேளையிலும் தகுந்த சந்தர்ப்பத்திலும் தவிர்க்கப்படல் வேண்டும்.

**41. நிலைபெற்றுள்ள தராதரங்களை மதித்தல்**
இந்தச் சமவாயத்தில் குறிப்பிட்டுள்ள தராதரங்களிலும் பார்க்க, தேசிய சட்டத் தராதரம் உயர்ந்ததாகக் காணப்பட்டால் உயர்ந்த தராதரமே நடைமுறைக்குப் பொருந்துவதாகும்.

**42. அமுலாக்குதல்**
இந்த உரிமைகளைப் பெரியவர்களும் பிள்ளைகளும் பரவலாக அறிந்து கொள்ளச் செய்தல் அரசுகளின் கடப்பாடாகும்.

சமவாயத்தில் எல்லாமாக 54 உறுப்புரைகள் உள்ளன. ஏனைய உறுப்புரைகள்,

- சமவாயத்தை அமுல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றி ஐந்தாண்டுக்கு ஒருமுறை அறிக்கை சமர்ப்பிக்கும் பொறுப்பு அரசாங்கத்தைச் சாருமெனச் சொல்கின்றன. அத்துடன்,
- சமவாயத்துக்குத் தம்மை அர்ப்பணித்தல் தொடர்பாக அரசாங்கங்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை விவரிக்கின்றன.

சிறுவர் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் சமவாயம் எல்லாப் பிள்ளைகளும் உயிர்வாழ, விருத்தியடைய, பாதுகாப்புப் பெற, சமூக நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமையுடையவர்களெனச் சொல்கிறது.



2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் உலகத் தலைவர்கள், தீர்மான கர்த்தாக்கள், சிறுவர் விடயங்களில் நிபுணத்துவம் பெற்றோர் யாவரும் பிள்ளைகளின் வாழ்க்கையைப் பாதிக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நியூயோர்க் நகரிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையில் நடைபெற்ற உலகின் மிகப்பெரிய மா நாட்டில் பங்கு பற்றினர். மேலே குறிப்பிடப்பட்ட நான்கு தொகுதி உரிமைகளும் அங்கு விவாதிக்கப்பட்டன. பிள்ளைகள் தங்களது உரிமைகளை மட்டுமல்லாது தங்களது வாழ்ககையைப் பாதிக்கும் விடயங்களையும் புரிந்து கொண்டால் மட்டுமே தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறமுடியும். இதன் காரணமாகவே நான்காவது தொகுதியான பங்கு கொள்ளுவதற்கான உரிமைகள், ஏனைய உரிமைகளைப் போல நன்கு அறியப்பபாத போதும் ஏனையவற்றைப் போன்று முக்கியத் துவம் பெறுகின்றன.

பங்குகொள்ளுதல் என்பது பிள்ளைகள், இளைஞர், யுவதிகள் ஆகியோர்

- சுயமாகச் சிந்தித்தல்
- தம் கருத்துகளை வலுவாக வெளிப்படுத்தி, தம் அக்கறைக்குரிய விடயங்களில் பெரியவர்களையும் ஈடுபடச் செய்தல்.
- ஏனைய மக்களுடன் ஆக்கபூர்வமான முறையில் கூடிப்பழகுதல்.
- தம் வாழ்வு, தம் சமூகத்திலும், சமுதாயத்திலும் உள்ள மக்களின் வாழ்வு ஆகியன தொடர்பான தீர்மானங்களில் தீவிர ஈடுபாடு கொள்ளுதல்

ஏனைய பிள்ளைகளினதும் வளர்ந்தோரினதும் கருத்துகளுக்கு மதிப்பளித்தல் ஆகிய விடயங்களை உள்ளடக்குகிறது.

சிறுவர் பாதுகாப்பு ஒன்றியம் பிள்ளைகளுக்கான உலகின் மிகப்பெரிய சுயாதீன இயக்கமாகும். உலகெங்கும் 100 க்கும் அதிகமான நாடுகளில் அது இயங்கி வருகிறது. இலங்கையில் சுமார் மூன்று தசாப்த காலமாக நாடெங்குமுள்ள மக்களுடனும் சிறுவர், சிறுமியருடனும் இணைந்து பிள்ளைகளுக்கு நன்மை பயக்கும் திட்டங்களைச் செயற்படுத்தியும் பிள்ளைகளின் உரிமைகளை நிதர்சனமாக்கும் பிரசார முயற்சிகளில் ஈடுபட்டும் வருகிறது.

ஐக்கிய நாடுகளின் முகவரகமாகிய ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (யுனிசெப்) பிள்ளைகளுக்கென்றே பிரத்தியேகமாகத் தன்னை அர்ப்பணித்துள்ள நிறுவனமாகும். அது, எல்லாப் பிள்ளைகளின் எல்லா உரிமைகளையும் பேணிப் பாதுகாக்கும் பணியில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஏனைய முகவரகங்கள், அரசாங்கங்கள், அரச சார்பற்ற அமைப்புகள், பொதுமக்கள் ஆகியோருடன் இணைந்து செயலாற்றி வருகிறது.

இந்தத் துண்டுப்பிரசுரம் சிறுவர் பாதுகாப்பு ஒன்றியம், யுனிசெப் ஆகிய இரண்டும் இணைந்து வெளியிட்டதொன்றாகும். சிறுவர் உரிமைகள் சமவாயத்தின் முழுமையான வாசகம் அல்லது வேறு தகவல்கள் தேவையானால் கீழ்க்காணும் முகவரிக்கு எழுதுங்கள்.

unicef
5, கீதாஞ்சலி பிளேஸ்,
கொழும்பு 3.
தொ.பே: 2555270
தொ. நகல்: 2551333

GUNARATNE OFFSET LTD

# பிள்ளைகளின் உரிமைகள்





# பிள்ளைகளின் உரிமைகள்

சிறுவர் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகளின் சமவாய சர்வதேசவாரியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். எல்லா பிள்ளைகளுக்கும் உள்ள உரிமைகளை அது வரையறுத்துள்ளது உலகின் அநேகமாக எல்லா நாடுகளும் இதன் அடிப்படையிலே பிள்ளைகள் நடத்தப்படுவர் என ஏற்றுக் கொண்டுள்ளன.

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தில் உலகின் அரசாங்கங்க கைச்சாத்திட்டுள்ள போதிலும் பிள்ளைகள் தம் உரிமைகளைத் தாமே அறிந்தும் புரிந்தும் கொள்ளுதல் அவசியமாகும். சிறுவர் உரிமைக பற்றிய ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது இவையே உங்கள் உரிமைகள்.......

### 1. பிள்ளை என்பதன் வரையறை

18 வயதுக்குட்பட்ட ஒவ்வொருவரும் பிள்ளையாவர். சமவாயத்தி குறிப்பிட்டிருக்கும் எல்லா உரிமைகளையும் ஒவ்வொரு பிள்ளையு அனுபவித்தல் வேண்டும்.

### 2. பாகுபாடு காட்டாமை

எல்லாப் பிள்ளைகளுக்கும் அவர்களின் வயது, பால், இனம், நிறம், சாதி மொழி அல்லது மதம் எவ்வாறிருப்பினும் இந்த உரிமைகள் உள்ளன அரசு பிள்ளைகளை எல்லா வகையான பாகுபாடுகளிலிருந்து பாதுகாப்பதுடன் அவர்களின் உரிமைகளைப் பரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தலும் வேண்டும்.

### 3. பிள்ளைகளின் சிறந்த நலன்

பிள்ளைகள் தொடர்பான சகல செயற்பாடுகளும் முடிவுகளும் அவர்களி சிறந்த நலன்களைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

### 4. சமவாயத்தை அமுலாக்கல்

அரசாங்கம் சமவாயத்தில் இடம் பெற்றுள்ள உரிமைகளை நிதர்சனமாக்குதற்குத் தன்னாலான சகல முயற்சிகளையு மேற்கொள்ளுதல் வேண்டும்.

### 5. பெற்றோரின் வழிகாட்டலும் பிள்ளையின் வளர்ச்சியும்

பிள்ளையின் பரிணாம வளர்ச்சித் திறனுக்கு ஏற்றவாறா நெறிமுறைகளைப் புகட்டுவதில் பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கு உள்ள உரிமைகளையும் பொறுப்புகளையும் அரசாங்கம் மதித்த வேண்டும்.




### 6. உய்வும் மேம்பாடும்

பிள்ளைகள் உயிர்வாழும் உரிமையுடையவர்கள் என்பதை ஒவ்வொருவரும் அங்கீகரித்தல் வேண்டும். பிள்ளைகளின் உய்வையும் வளர்ச்சியையும் அரசாங்கம் உறுதி செய்தல் வேண்டும்.

### 7. பெயரும் தேசியமும்

ஒவ்வொரு குழந்தையும் பிறப்பிலிருந்து தனக்கென ஒரு பெயரைப் பெறும் உரிமையுடயது. அது ஒரு தேசியத்தில் சேர்த்துக்கொள்ளப்படவும் வேண்டும்.

### 8. ஆளடையாளம் பேணல்

அரசாங்கம் குழந்தையின் ஆளடையாளத்தைப் பாதுகாத்தல் வேண்டும். அவசியமானால் அரசாங்கம் குழந்தையின் ஆளடையாளம் தொடர்பான அடிப்படை அம்சங்களை (பெயர், தேசியம், குடும்ப உறவுகள் ஆகியவற்றை) மீள நிரூபித்தல் வேண்டும்.

### 9. பெற்றோரைப் பிரிதல்

பிள்ளைகளை, அவர்களின் சிறந்த நலனை முன்னிட்டு அல்லாமல் (புறக்கணிப்பு, துஷ்பிரயோகம் போன்ற காரணங்களை முன்னிட்டு அல்லாமல்) மற்றும்படி பெற்றோரிடமிருந்து பிரித்தல் ஆகாது. பெற்றோர் பிரிந்து வாழ முடிவு செய்யும் பட்சத்தில் பிள்ளை இருவரில் ஒருவரை அல்லது இருவரையும் பிரிந்து வாழுமானால் இரு பெற்றோருடனும் தொடர்பு வைத்திருக்கும் உரிமை அதற்கு உண்டு.

### 10. பிரிந்த குடும்பம் இணைதல்

பெற்றோருடன் மீண்டும் இணைந்து கொள்ளுதற்கோ, பிள்ளைக்கும் பெற்றோருக்குமுள்ள உறவைப் பேணுதற்கோ எந்த நாட்டையும் விட்டு அகலுதற்கோ அல்லது தன் சொந்த நாட்டில் நுழைவதற்கோ பிள்ளைகளும் பெற்றோரும் உரிமையுடையவர்களாவர்.

### 11. பிள்ளைகளின் சட்ட விரோத மாற்றமும் மீளாமையும்

பெற்றோரில் ஒருவரால் அல்லது வேறொருவரால் பிள்ளை, கடத்தப்படுதலை அல்லது பலாத்காரமாக வெளிநாட்டில் தடுத்து வைக்கப்படுதலை அரசாங்கம் தடுக்க முயல்வதுடன் அவர்களை மீட்பதற்கும் ஒத்தாசை செய்தல் வேண்டும்.

### 12. பிள்ளையின் கருத்து

ஒவ்வொரு பிள்ளையும் தன் கருத்தை வெளியிடுவதற்கும் தன்னைப் பாதிக்கக் கூடிய எந்த விடயம் அல்லது நடைமுறை பற்றி அதன் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவும் உரிமையுடையதாகும். அத்துடன் வளர்ந்தோரால் அது கருத்திற் கொள்ளப்படுதற்கும் உரிமையுடையதாகும்.

### 13. கருத்துச் சுதந்திரம்

பிறரின் உரிமைகளை மீறினாலல்லாமல் மற்றும்படி தகவல்களைப் பெறவும் மற்றவர்களுக்கு அவற்றைப் பரிமாறவும் தன் கருத்துகளை வெளியிடவும் பிள்ளைக்கு உரிமையுண்டு.

### 14. சிந்தனை, மனச்சாட்சி மதவழிபாட்டுச் சுதந்திரம்

ஒவ்வொரு பிள்ளையும் பெற்றோரின் வழிநடத்தலுக்கும் தேசிய சட்டத்துக்கும் அமைந்த முறையில் சிந்தனை, மனச்சாட்சி, சமயம் ஆகிய விடயங்களில் சுதந்திரமாக இயங்க உரிமையுடையவராவர்.

### 15. கூடும் சுதந்திரம்

பிள்ளைகள் மற்றவர்களைச் சந்திக்க, கூட அல்லது சங்கங்களை அமைக்க உரிமையுடையவர்கள். ஆனால் இது பிறரின் உரிமைகளுக்குப் பாதகமாய் அமைதலாகாது.





### 16. அந்தரங்கத்தைப் பேணல்

பிள்ளைகள் தங்களது அந்தரங்கத்தைப் பேண உரிமையுடையவர்கள். தமது அந்தரங்கம், குடும்பம், வீடு, கடிதத் தொடர்பு ஆகியவற்றுக்குப் பாதுகாப்புப் பெறும் உரிமை அவர்களுக்கு உண்டு.

### 17. பொருத்தமான தகவல்களைப் பெறல்

வெகுசன ஊடகங்கள் ஆற்றும் பணியின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து, விசேடமாக அதன் சேம நலனுக்கும் பண்பாட்டுப் பின்னணிக்கும் ஏற்ற தகவல்களையும் தகவற் சாதனங்களையும் பெறுவதற்குரிய வாய்ப்புகளை உறுதி செய்தல் வேண்டும்.

### 18. பெற்றோரின் கடப்பாடுகள்

தம் பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோர் இருவரும் கூட்டாகப் பொறுப்பேற்றல் வேண்டும். பெற்றோர் இதனை நிறைவேற்றுவதற்கு அரசு ஆதரவளித்தல் வேண்டும்.

### 19. இம்சை, புறக்கணிப்பு ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு

பிள்ளைகள் சகல வகையான இம்சைகள், புறக்கணிப்பு ஆகியவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமையுடையவர்களாவர். பெற்றோரும் ஏனைய பராமரிப்பாளர்களும் பிள்ளைகளைத் துன்புறுத்தும் உரிமையற்றவர்களாவர். பிள்ளைகள் இம்சைகள், புறக்கணிப்பு ஆகியவற்றிற்கு உள்ளாகாது தடுக்கவும் அவற்றிலிருந்து மீளவும் வகை செய்யும் செயற்திட்டங்களைப் பொறுப்பேற்கும் கடப்பாடு அரசுக்குரியதாகும்.

### 20. குடும்பங்களற்ற பிள்ளைகளின் பாதுகாப்பு

தம் குடும்பத்தவர்களுடன் வாழ முடியாத பிள்ளைகளுக்கு விசேட பாதுகாப்பு அவசியம். பிள்ளையின் பண்பாட்டுப் பின்னணிக்கு உகந்த மாற்றுக் குடும்பப் பராமரிப்பை ஏற்பாடு செய்தல் அல்லது தாபரிப்பு வழங்கும் ஒரு விடுதியில் தங்க வைத்தல் அரசாங்கத்தின் கடப்பாடாகும்.

### 21. தத்தெடுத்தல்

ஒரு பிள்ளையைத் தத்தெடுப்பதானால் அதனைச் சட்டமுறைப்படியும் பிள்ளையின் சிறந்த நலனுக்கு அமைவாகவும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

### 22. அகதிப் பிள்ளைகள்

ஒரு பிள்ளை பாதுகாப்பு இல்லை என்னும் காரணத்தினால் தன் வீட்டை அல்லது நாட்டைப் பிரிந்து அகதியானால் அப்பிள்ளை விசேட பாதுகாப்பும் ஆதரவும் பெறும் உரிமையுடையதாகும்.

### 23. ஊனமுற்ற பிள்ளைகள்

உள்ளத்தால் அல்லது உடலால் ஊனமுற்ற பிள்ளைகள், முடிந்தளவு சொந்தக் காலில் நின்று சமுதாயத்தில் முழுமையான, செயலூக்கமுள்ள வாழ்க்கை நடத்துதற்கு உதவும் வகையிலான விசேட பராமரிப்பு, கல்வி, பயிற்சி ஆகியவற்றைப் பெறும் உரிமையுடையவர்களாவர்.

### 24. சுகாதாரமும் சுகாதார சேவைகளும்

பிள்ளைகள் கூடுமானளவு உயரிய சுகாதார வசதிகளைப் பெறும் உரிமையுடையவர்களாவர். சுகாதார மற்றும் வைத்திய சேவைகளைப் பெறும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்தல் வேண்டும். விசேடமாக சிசுமரணம், நோய், போசாக்கின்மை, ஆகியவற்றைக் குறைக்கும் வகையிலான ஆரம்ப மற்றும் தடுப்பு ரீதியான சுகாதார பராமரிப்பு, பொதுச் சுகாதாரக் கல்வி, அவை தொடர்பான செயற்திட்டங்கள் ஆகியவற்றை பெறும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்தல் வேண்டும்.



### 25. காலத்துக்கு காலம் பரிசீலித்தல்

அரசினால் பராமரிப்பு, பாதுகாப்பு, சிகிச்சை ஆகியவற்றின் பொருட்டு வீட்டுக்கு வெளியே தங்கவிடப்பட்டுள்ள பிள்ளை அவ்வாறு தங்கியுள்ளமை தொடர்பான சகல அம்சங்களும் கிரமமாக ஆராயப்படுவதற்கு உரிமையுடையதாகும்.

### 26. சமூக பாதுகாப்பு

தன் நாட்டில் கிடைக்கும் சமூகபாதுகாப்பின் அனுகூலங்களைப் பெறும் உரிமை பிள்ளைக்கு உண்டு.

### 27. வாழ்க்கைத் தரம்

ஒவ்வொரு பிள்ளையும் தகுந்த தரம் வாய்ந்த வாழ்க்கையை அனுபவிக்கும் உரிமையுடையதாகும். இதனை வழங்குதல் பெற்றோரின் முதற் கடப்பாடு ஆகும். பெற்றோரால் அது முடியாத பட்சத்தில் அரசாங்கம் உதவுதல் வேண்டும்.

### 28. கல்வி

எல்லாப் பிள்ளைகளும் கல்வி பயிலும் உரிமையுடையவர்களாவர். அரசு ஆரம்பக் கல்வியேனும் கட்டாயமாகவும் இலவசமாகவும் கிடைப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

### 29. கல்வியின் நோக்கங்கள்

ஒரு பிள்ளை கல்வி கற்பதன் நோக்கம் அதன் ஆளுமை, திறன்கள், உடல் மற்றும் உள வகையான ஆற்றல்கள் என்பன முற்றுமுழுதாய் விருத்தியடையச் செய்தலாகும். சுதந்திரமான சமுதாயத்திலே அடிப்படை மனிதஉரிமைகளுக்கும் தம் சொந்தக் கலாசார, தேசிய விழுமியங்களுக்கு மட்டுமல்லாமல் மற்றவர்களின் விழுமியங்களுக்கும் மதிப்பளித்து பொறுப்புடனும் சமாதானமாகவும் வாழ்வதற்கு அவர்களைத் தயாரித்தலும் வேண்டும்.

### 30. சிறுபான்மையினரின் பிள்ளைகள்

சிறுபான்மைச் சமூகங்கள், ஆதிவாசிகள் ஆகியோரின் பிள்ளைகள் தம் சொந்த பண்பாட்டினை அனுபவிப்பதற்கும் தம் சொந்த மதம், மொழி ஆகியவற்றைப் பின்பற்றுதற்கும் உரிமையுடையவர்களாவர்.

